MJSSH Muallim Journal of Social Science and Humanities

**Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)**
**Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691**

---

# மாஸ்லோவின் பொருளாதார பாதுகாப்புத் தேவை நோக்கில் திருக்குறள்

# APPLICATION OF MASLOW'S THEORY OF ECONOMIC SAFETY NEEDS IN THIRUKKURAL

**சத்தியா சின்னையா[1] / Sathiya Sinaiah [1]**
[1]தாமான் மெலாத்தி இடைநிலைப்பள்ளி, சிலாங்கூர் / Taman Melati Secondary School, Selangor.
மின்னஞ்சல் / Email: kaizens.satya@gmail.com

**Abstract**

The objective of this research paper is to identify Maslow's Theory of Economic Safety Needs in Tamil Classic Literature called Thirukkural. Thiruvalluvar wrote Thirukkural thousands of years ago. Nowadays, the needs of the human vary and increasing according to the situation. Theory of Needs by Maslow has been coded in the 20th century when Human Resource principles have been introduced. Thus, this research has been done to identify the application of latest Theory of Economic Safety Needs by Abraham Maslow in the ancient classic Tamil Literature, Thirukkural.

**Keywords**: Thirukkural, Safety Needs, Human Resource Principles, Maslow's Theory of Needs, Economic Safety

**ஆய்வுச் சாரம்**

இந்த ஆய்வின் நோக்கமானது மாஸ்லோவின் பொருளாதார பாதுகாப்புத் தேவைக் கோட்பாட்டு அடிப்படையில் அமைந்துள்ள குறள்களைக் கண்டறிவதாகும். திருக்குறள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக திருவள்ளுவரால் எழுதப்பட்ட ஒரு நீதி நூல். இன்றைய நிலையில், மனிதனின் தேவைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு 20-ஆம் நூற்றாண்டில், மனிதவள மேலாண்மை சார்ந்த கோட்பாடுகள் தோற்றம் கண்ட பின்னர், தோற்றுவிக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும். ஆகவே, இந்த ஆய்வானது, 20-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட மாஸ்லோவின் பொருளாதார பாதுகாப்புத் தேவை கோட்பாட்டினைப், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்ட திருக்குறளுடன் பொருத்திப் பார்க்கும் வகையில் அமைந்துள்ளது.

***கருச்சொற்கள்:*** திருக்குறள், பொருளாதாரம், பாதுகாப்புத் தேவை, மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு, மனிதவள மேலாண்மை

***முன்னுரை***

மதுரைத் தமிழ்***ப்*** பேரகராதி, திருக்குறள் என்பதற்குப் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றும், அதிகாரத்திற்குப் பத்து குறள் கொண்ட நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் அறம் பொருளின்பங்களைப் பற்றிக் கூறுவதுவமான திருவள்ளுவர் இயற்றிய நூல் என்று**ம்** குறிப்பிடப்பட்டுள்ளது (கோபாலகிருஷ்ணன், 2004)[1].

***திருவள்ளுவர் எனும் சங்ககால புலவர் இயற்றிய திருக்குறள் எனும் இலக்கிய நூல் தமிழர்களின் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. எவ்வித மத, இன, சமய நம்பிக்கைகளையும் சாடாத வகையில் திருக்குறள் அமைந்துள்ளமையால் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறள் பற்றி*** கூறுகையில், கி. கருணாகரன் எனும் மொழியியலாளர்,

> *"திருக்குறள் தமிழின் மாண்பை, செம்மையை உலகறியச் செய்த இலக்கியம் எனில் அது சற்றும் மிகையாகாது. மேலும், இந்நூலினை, அறநூலாக, அனைவருக்கும் ஏற்புடைய நூலாக, பன்னெடுங்காலத்திற்கும் பொருந்தும் நூலாக, பலரும் பாராட்டும் நூலாக, பலருக்கும் தேவையான வாழ்வியல் அடிப்படை உண்மைகளைப் பொருண்மையாகக் கொண்டு விளங்கும் நூலாக நாம் பாராட்டுகிறோம்; பரப்புகிறோம்; பின்பற்றுகிறோம். மற்றெந்தவொரு இலக்கியப் படைப்பிற்கும் இல்லாத தனிச் சிறப்புகள், தன்மைகள் திருக்குறளுக்கு உண்டு என்று குறிப்பிட்டுப் பெருமைக் கொள்கிறோம். இந்த உள்ளுணர்வு சரியே என்பதைத் தற்சார்பற்ற முறையில் (in an objective way) வெளியுலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்"* (கருணாகரன், 2015)[1]

என்று குறிப்பிட்டுள்ளார்.

***அவ்வகையிலே திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று உறுதிப் பொருள்களையும் விரிவாக*** 133 ***அதிகாரங்களாக அமைந்த*** 1330 ***குறட்பாக்களால் சொல்லும் நூலாகும். நூலுக்குப் பயன் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்பர். "அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே" என்பது இலக்கண வரையறை. திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றையும் வெளிப்படையாகவும், வீடு பேறினைப் பற்றி இன்பத்துப்பாலில் இணைத்துப் புதைபொருளாகவும் வழங்கியுள்ளார்*** (புனித்தா, 2008)[3].

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

**அறத்துப்பாலில் ஒரு தனிமனித வாழ்க்கையின் கூறுகளையும், பொருட்பாவில் அரசியல் நீதி நெறிகளையும் காமத்துப்பாலில் இல்லறத்தினைப் பற்றியும் இரண்டு வரிகளில் ஆனால் ஆழ்ந்த பொருள் கொண்டு திருவள்ளுவர் எழுதியுள்ளார். இதனூடே, மனிதன் எனும் ஓர் இனம் பல பரிமாணங்களைக் கடந்து, இன்று பண்பட்ட சமுதாயமாக திகழ்வதற்குக் "தேவை" எனும் அடிப்படைக் கூறுகளே காரணமாக அமைந்தன என்பது குறள்களின் வழியும் உணர்த்தப்படுகிறது** (வரதராசன், 1987)[4].

**ஆகவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட திருக்குறளில் உள்ள மனிதர்களின் தேவை சார்ந்த குறள் எந்த அளவிற்கு இன்றைய 20-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட மாஸ்லோவின் தேவை கோட்பாடுடன் பொருந்தி வரும் என்று கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.**

**மாஸ்லோவின் பொருளாதார பாதுகாப்புத் தேவைக் கோட்பாடு**

இன்றைய வாழ்வியலில் மனித உறவுகளும் கூட தேவைகளின் அடிப்படையில் பிண்ணிப் பிணைந்துவிட்டச் சூழல் பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. எனவே, இந்நிலையில் ஒவ்வொருவரும் தன்முனைப்புடனும் உற்சாகத்துடனும் இருப்பதற்கு அவர்களின் தேவை சார்ந்த கூறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒருவரின் தேவை நிறைவேற்றப்படும் பொழுதே அவர் மனநிறைவுடன் இருப்பார் என்பது நாமறிந்ததே.

காட்டாக, ஒரு சிறுமிக்கு வேண்டிய விளையாட்டுப் பொருளை அடம் பிடித்துப் பெற்றுக் கொண்ட பின்னரே, அவள் மகிழ்ச்சியாக விளையாடத் தொடங்குகிறாள். அதுபோலவே, ஒருவரின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும் பொழுதே அவரின் மனம் நிம்மதி கொள்கிறது; தமது கடமைகளை எவ்வித சிக்கலுமின்றி செய்து முடிக்கின்றார்.

மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு மனிதவள மேலாண்மை கோட்பாடுகளுள் ஒன்றாகும். இக்கோட்பாடு ஆப்ரஹாம் மாஸ்லோ என்பவரால் 1980-களில் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு மனிதனின் தன்முனைப்பு அவனின் தேவைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதனைக் இக்கோட்பாட்டின் வாயிலாக மாஸ்லோ குறிப்பிட்டுள்ளார். மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டில் ஐந்து படிநிலைகள் கூறப்பட்டுள்ளன. அவையாவன,

1. உடலியற் தேவை
2. பாதுகாப்புத் தேவை
3. சமூகத் தேவை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

4. கௌரவத் தேவை
5. தன்னலம் அறியும் தேவை

மாஸ்லோ கோட்பாட்டின் அடிப்படையில், முதலாவதாக கூறப்படும் உடலியற் தேவைக்கு அடுத்ததாக கூறப்படுவது பாதுகாப்புத் தேவையாகும். அவ்வகையிலே திருவள்ளுவர் பாதுகாப்புத் தேவைகளை எவ்வாறு பகன்றுள்ளார் என்று நோக்குவது அவசியமாகிறது. ஒருவரின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுவிட்ட பிறகு, அடுத்ததாக உணரப்படும் தேவையானது பாதுகாப்புத் தேவை என்று மாஸ்லோ தமது தேவை படிநிலைகளில் குறிப்பிட்டுள்ளார்.

மனிதனின் பாதுகாப்புத் தேவை அவரது உடலியலையும் உளவியலையும் ஒரு சேர பாதிக்கின்றது. பாதுகாப்பான உறைவிடம், மருத்துவ காப்பீடு, வேலை உத்திரவாதம் மற்றும் சேமிப்புத் தொகை ஆகியவை ஒருவரின் தன்முனைப்பினைத் தற்காத்துக் கொள்வதற்கு அத்தியாவசியமானதாக கருதப்படுகின்றன. பாதுகாப்புத் தேவைகள் குறித்து ஆராய்கையில், பொருளாதாரத் தேவை குறித்த திருவள்ளுவரின் குறள் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நட்டிலும் கோட்பாடுகள் உருவாவதற்கு அந்நாட்டில் தொன்றுதொட்டு வந்த நடைமுறைகளும், அதன் பயனாய் வளர்ந்த கொள்கைகளுமே காரணமாகின்றன. எந்த ஒரு தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் பொருள் தேவை. பொருளே ஆதாரம் என்று கூறாவிட்டாலும், பொருளின்றி செய்தல் அரிது.

கிரேக்கச் சொல் "Eco" என்ற அடிச்சொல்லிலிருந்தே "Economics" என்ற சொல் வந்தது. இச்சொல்லுக்கு குடும்ப நிர்வாகம் என்று பொருள். கிரேக்கச் சொல்லும் திருவள்ளுவர் பொருள் பற்றிக் குறிப்பிடும் சொல்லும் ஒன்றாகவே காணப்படுகிறது. தலைவியின் பொருளாட்சியில் தான் இல்லறமே சிறந்து விளங்கும். இதனைத் தமிழகத்தில் "நாட்டுக்கு அரசன், வீட்டுக்கு மனைவி" என்ற பழமொழியின் வழி சுட்டுவர் (McLeod, 2007)[5].

ஆகவே, 'மாஸ்லோவின் பொருளாதார பாதுகாப்புத் தேவை நோக்கில் திருக்குறள்" எனும் இவ்வாய்வின் வாயிலாக, திருவள்ளுவர் கூறியுள்ள மனிதவள மேலாண்மை கூறுகள் மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆராயப்படுள்ளன.

**மாஸ்லோவின் பாதுகாப்புத் தேவைக் கோட்பாடு நோக்கில் திருக்குறள்**

*The Kural is the master-piece of Tamil literature, one of the highest and purest expressions of human thoughts* என்றியம்பிய "ஏரியல்" எனும் அறிஞரின் வார்த்தைகள்

திருக்குறளில் உள்ள மனிதவள கோட்பாடுகளைக் குறிப்பாக மாஸ்லோவின் தேவைக் கோட்பாடுகளைக் நன்கு உணர்த்துகின்*றன.*

இந்நிலையில், பொருளாதார பாதுகாப்புத் தேவை சார்ந்த திருவள்ளுவரின் கருத்துகளை நுணுகி ஆராய்வது இவ்வாய்விற்கு அவசியமாகிறது. *ஒரு கருத்தை எடுத்துக் கொண்டு அதனைப் பத்து வகையில் அலசி ஆராய்தல் அக்கருத்தைக் கசடறத் தெரிந்து தெளிந்து கடைப்பிடிக்க உதவும்.*

***கற்க கசடறக் கற்பவைக் கற்றபின்***
***நிற்க அதற்குத் தக.*** (குறள் 391)[6]

*என்று தான் கூறியதற்கேற்றாற்போல்* திருவள்ளுவர் *ஒரு பொருளின் இயல்பு, அதுபற்றிய விளக்கம், அதன் ஆற்றல், முதன்மை, முறைமை, செயல், வகை, நயம், பயன், நம் கடமை என்பவற்றை* பத்து *முறைகளாக்கிக்* கூறியுள்ளார். இக்கூறுகளாவன *கற்றுத் தெளிந்து வாழ்க்கையில் அதனைப் பின்பற்ற உகந்தன.* அவ்வாறு பொருளியலைப் பற்றி திருவள்ளுவர் பத்து வகையில் ஆராய்ந்து கூறுகையில், *ஒரு நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு வேளாண்மை அடிப்படையானது என்கிறார்.*

சுழன்றுஏர்ப் பின்னது உலகம், அதனால்
உழந்தும் உழவே தலை. (குறள் 1031)[6]

மக்கள் பல்வேறு தொழில்களைச் சுழன்று சுழன்று செய்தாலும் அவையெல்லாம் உழவுத் தொழிலுக்குப் பிற்பட்டனவே. தொல்லைகள் தந்தாலும், உழவுத் தொழிலே தலைச் சிறந்த முதன்மையான தொழில் என்கிறார். உலக நாடுகள் அனைத்தின் அடிப்படைத் தொழிலான வேளாண்மை பொறியியலின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. “இலாப நோக்கோடு செய்யப்படும் தொழில்களுள் விவசாயத்தைவிடச் சிறந்தது இல்லை” என்பார் “சிசிரோ”. ஆகவே, பொருள் ஈட்டலில் முதன்மையாகச் செய்யப்பட்ட தொழில் வேளாண்மை. அதிலிருந்தே ஒரு நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறத் தொடங்கிற்று. அதுமட்டுமின்றி,

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)[6]

அருள் இல்லாதவர்க்கு மேலுலகில் மட்டும் தான் இடம் இல்லை. ஆனால், பொருள் இல்லாதவர்க்கு தான் வாழ்கின்ற உலகில் இடம் இல்லை என்று பொருட் செல்வத்தின் பயனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும், முதலில் வரும் அருளைப்பற்றி

சிந்திப்பதைவிடப் பின்னால் வரும் பொருளைப் பற்றினதே அனைவர் மனத்திலும் முந்தி நிற்கிறது. பொருளின்றி இவ்வுலகில் வாழ்தல் அரிது என்பது உண்மை என அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆகவே, வாழ்க்கைக்குப் பொருள் பாதுகாப்புத் தேவை முக்கியம். இதைத்தான் வள்ளுவர்,

இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (குறள் 752)[6]

என்று கூறியுள்ளார். அஃதாவது ஒருவர் சிறப்பெய்த வேண்டுமெனில் பொருள் நிறைந்திருக்க வேண்டும் அல்லது செல்வராக இருக்க வேண்டும். செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர். செல்வம் உள்ளவரை எல்லோரும் போற்றுவர் என்று கூறியுள்ளார். இதை உணர்ந்தே, நம் நாட்டு இளைஞர்களும் அறிவுச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டு பொருள் செல்வத்தைத் திரைகடல் ஓடித் தேடுகிறார்கள்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள். (குறள் 751)[6]

ஒரு பொருட்டாக மதிப்பதற்குத் தகுதி இல்லாதவரையும், மதிப்பிற்குரியவராகச் செய்வது செல்வமே. அஃதில்லாமல் வேறொன்றுமில்லை என்று கூறியுள்ளார். இதற்கு இக்கால வாழ்க்கை முறையே நல்ல உதாரணம். பொருள் ஈட்ட தொழில்கள் பல உண்டு. தொழில்திறன் இயற்கையின் வரப்பிரசாதம். உலகில் செய்யப்படும் எல்லாத் தொழில்களின் அல்லது செயல்களின் இறுதி விளைவும் பொருள் ஈட்டலிலேய முடிகின்றது. அப்பொருள் அடுத்த செயல் அல்லது தொழிலைச் செய்வதற்கு ஆதாரமாக திகழ்கின்றது.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (குறள் 760)[6]

பொருளைச் சேர்க்க வேண்டும். அதுவும் நல்ல வழியில் சேர்க்க வேண்டும். நல்ல வழியால் பெரும்பொருளைச் சேர்த்தவருக்கு அறமும் இன்பமும் ஒருசேர எளிதாய் வந்தடையும் என்கிறார் வள்ளுவர். “பொருளென்னும் பொய்யா விளக்கம்”, “செல்வரை செல்லோருஞ் செய்வர் சிறப்பு”, “பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்”, “செறுநர் செருக்கறுக்கும் பொருள்”, “ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு” என்ற கருத்துக்களாலும்,

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
திதின்றி வந்த பொருள். (குறள் 754)[6]

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

என்று கூறுவதன் வாயிலாகவும் "பொருளே சிறப்புடையது" என்றும், அதன் வாயிலாய் அறம், இன்பம் இரண்டையும் எளிதாய்ப் பெறலாம் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். இதன்மூலம், மற்றவற்றைப் பெற முதன்மையாய்ச் செயல்படுவது பொருளே என்பது புலனாகிறது.

திருவள்ளுவர் பொருளே சிறந்தது என்று வலியுறுத்துபவராயினும் அறவழிப் பொருளையே அரசனுக்குக் கூறினார். அரசுக்கு நெருக்கடியான காலத்திலும், பொருளை அறத்துக்கு மாறான வழியிலும் மக்களை ஏமாற்றியும், தண்டனையை மிகுதியாக்கியும் சேர்த்தல் மிகத் தவறானது என்று சாடுகிறார். அறவழிப் பொருளே சிறந்த பொருள் என்று கூறுகிறார்.

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (குறள் 757)[6]

அன்பினால் ஈன்றெடுக்கப்பட்ட அருள் என்னும் குழந்தை, பொருள் என்று சொல்லப்படும் செல்வச் செவிலித்தாயால் வளரும். ஆகவே, பொருள் என்பது அனைத்திற்கும் வேண்டப்படுவது என்கிறார் திருவள்ளுவர். பொருள் இல்லாமல் உலக நாடுகள் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க முடியுமா?

திருவள்ளுவர் நாட்டின் தன்மை மற்றும் வளத்தைப் பற்றி விளக்கும்போது, உழவுத்தொழில் சிறக்க வேண்டும். அதற்கு உழைப்பும், சோம்பலின்மையும் மிகத்தேவை என்கிறார். உழைப்பவர்கள் மிகுதியாய் வேண்டும் எனவும் மற்றும் அவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறார். எல்லா மக்கட்கும் தலைசிறந்த தொழில் உழவுத் தொழில் என்று கருத்துரைத்துள்ளார். மேலும், உழுபவனுக்கெ நிலம் சொந்தமாக இருத்தல் வேண்டுமென்ற கொள்கையை, பொருள் ஈட்டலில் முதன்மையாகச் சிறப்பிக்கப்பட வேண்டியது உழவுத் தொழிலேயாகும் எனவும் கூறுகிறார்.

ஒரு நாட்டின் ஏழ்மை நிலையைப் எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி விளக்கமாகப் பொருட்பாலில் வள்ளுவர் கூறியுள்ளார். ஒரு நாடு முன்னேற அந்நாட்டின் பொருளாதாரம் முதலில் ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் திட்டங்களை இதனடிப்படையில் படிப்படியாக அமைத்தால் அந்நாட்டின் முன்னேற்றம் மிக விரைவில் எளிதாக ஏற்பட்டுவிடும்.

மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று பொருள் ஈட்டுதல். பொருளில்லாமல் எந்த நன்மையையும் அடைதல் முடியாது. புறவாழ்க்கைக்கு அது இன்றிமையாதது. ஆயினும்,

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

தீய வழிகளில் பொருள் ஈட்டாமல் அதை முறையாகத் திறனறிந்து பொருள் ஈட்டுதலே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது என்று கூறுகிறார் வள்ளுவர்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (குறள் 754)[6]

என்று கூறுகின்றார். மேலும், திருவள்ளுவர் தன் முப்பாலிலும் தாம் பாடுதற்குரிய பொருளாக மனிதனையே எடுத்துக் கொண்டார். திருவள்ளுவர்க்கு மனிதனே வானவரைவிடச் சிறந்தவனாக தோன்றுகின்றான். மண்ணுலகில் தோன்றிய மனிதன் சிறப்பாக வாழ்ந்து, விண்ணுலகச் சிறப்பினை இந்த மண்ணுலகிலேயெ அடைய வேண்டும்; அதற்கு என்ன வழி என்று ஆய்ந்து அதனை வகுத்துக் கூறுகிறார்.

மனிதன் உய்யும் நெறி பற்றிப் பண்டைக் காலந் தொட்டே எண்ணி வந்தனர். தொல்காப்பியனார் அதனை அகம், புறம் என்ற இரண்டு இலக்கிய நெறிகளாக வகுத்துக் காட்டினார். பின் வந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" என்றார். திருவள்ளுவர் முப்பாலாகப் பகுத்துக்கூறிய வாழ்க்கை நெறியைக் கீழ்க்காணும் பகுப்பு முறையோடு கூறலாம்.

1. தனி மனிதன், மணந்து கொள்ளாது வாழும் தனி வாழ்க்கை
2. தன் மனைவியுடன் நடத்தும் காதல் வாழ்க்கை
3. கணவனும் மனைவியும் சேர்ந்து சமுதாயத்தில் வாழும் சமுதாய வாழ்க்கை

மனிதனாகப் பிறந்தவன் மனப்பக்குவம் அடைந்து பிறர்க்கெனவே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டு தெய்வ நிலையடைகின்றான். இது மனம் வளரும் நிலை. சமுதாயத்தில், சமுதாயப் பங்கு கொள்ளத் தம்மை மறக்கும் நிலை உருவாகின்றது. மனிதன் மனத்துக்கண் மாசு இலாது வாழக் கற்றுக் கொள்கிறான்; காதலிக்கிறான். இருவர் ஆயினர். பலர் பொருட்டு வாழ்ந்து படிப்படியாக உலகுக்கே வாழத் தொடங்குகின்றனர். தமக்கு என ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல், எம்முடையது என்று எந்தப் பொருள் மீதும் உரிமை பாராட்டாமல் பற்றற்ற நிலையில் பிறர்க்கெனச் சமுதாய நலன் கருதி வாழக் கற்றுக் கொள்கின்றனர். ஆசையிலிருந்து விடுதலை அடைவதால் இந்த நிலையை வீடு என்றும் குறிப்பிடுவார்கள். இதை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)[6]

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

என்பதால் மனிதன் தெய்வ நிலையினைப் பெறலாம் என்று கூறுகின்றார். இதற்கு அடிப்படையாய் இருப்பது அவன் பொருளை ஆளும் திறனேயகும். பொருளாட்சியால் ஒருவன் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை அடைகிறான்.

திருவள்ளுவர் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது, அவளுடைய மாண்புக்குப் பல காரணங்கள் அமைகின்றன. அவற்றுள் ஒன்று கணவனுடைய வருவாய்க்கேற்பச் செலவு செய்வது, இதனை வளத்தக்காள் என்று குறிப்பிடுகின்றார். வளத்தக்காள் என்பதை வீட்டை நிர்வாகம் செய்வது எனலாம். கணவனுடைய வருவாய்க்கு ஏற்பக் குடும்பத்தை நடத்துகின்றவளே உண்மையான பொருளியல் நுட்பம் அறிந்தவள் என்பது பொருள்.

பொருளைப் பொருளுக்காகவே மட்டும் பெறுதல் கூடாது. அதனை அறவழியிலும் ஈட்ட வேண்டும். அதற்காகத் திருவள்ளுவர் பழியஞ்சிப் பொருளைத் தேடு என்று கூறுகிறார். முயற்சி செய்து பொருளை அறவழியில் தேடு; தேடிய பொருளைப் பகிர்ந்து கொடு, பிறரும் பெற்று இன்புறட்டும். இதுதான், நூலோர் கூறும் சிறந்த நெறி என்கிறார்.

தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் 212)[6]

உழைத்துப் பணத்தைத் தேடி, தேடிய பொருளைத் தகுந்தவருக்கு அளிக்க வேண்டும். தகுந்தவருக்கு உபகாரம் செய்வதற்கே பணம் திரட்டப்படுவதாக கூறுகின்றார்.

பழியஞ்சிப் பாத்துண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (குறள் 44)[6]

அறவழியில் பழிபாவத்திற்கு அஞ்சிப் பணம் சேர்த்து, அதனைப் பலர்க்கும் பகிர்ந்து அளித்து வாழ்ந்து வந்தால் ஒருவனுடைய சந்ததி வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும். தனக்கு இன்பமும், தன்னைச் சார்ந்தார்க்கும் குடும்பத்தார்க்கும் சமூகத்தார்க்கும் நலமும் பயக்கும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (குறள் 322)[6]

திருவள்ளுவர் பொருள் பற்றிய தம் அரிய கருத்தினைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். தேடிய பொருளைப் பகிர்ந்துண்டு (Distribution), பல உயிர்களையும் காப்பாற்றி வாழும் நெறியே சிறந்த நெறியாகும். திருவள்ளுவர் பொருட்பாவில்,

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 53-63 / ISSN: eISSN 2590-3691

சிறப்பீனும் செல்வமும்ஈனும் அறத்தி னூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள் 31)[6]

என்கிறார். அதாவது அறம் மக்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்கும். எனவே, அவ்வறத்தைக் காட்டிலும் நன்மை தருவது வேறில்லை எனக் கூறியுள்ளார். குடும்பத்தில் வேலையின்மையால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுச் சிக்கல் ஏற்படுகிறது. இதனைச் சார்ந்து கூறுகையில்,

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. (குறள் 678)[6]

என்கிறார் திருவள்ளுவர். ஒருவன் தொழிலைச் செய்கின்ற போது அதனோடு தொடர்புடைய இன்னொரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்து. இதன்மூலமாக, திருவள்ளுவர் நுண்திறமைகளை வளர்த்துக் கொள்வது நன்று என்று கூறுவது புலப்படுகின்றது. திருவள்ளுவரின் சிந்தனை, எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய, அழிவில்லாத கூறுகள் என்பது மிகத் தெளிவு.

**முடிவுரை**

சுருங்கக் கூறின், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்ட திருக்குறள் கடந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மாஸ்லோவின் தேவை கோட்பாடுகளுடன் குறிப்பாக பொருளாதார பாதுகாப்புத் தேவைகளுடன் பல கோணங்களில் பொருந்தி வருகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நூல்களைப் படிக்கும் மனிதன், எளிய நூலான திருக்குறளைப் பழக்கத்தில் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கது.

இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் வாழும் மனிதன், மனநலத்தைப் பேண முடியாமல் பாதிப்பிற்குள்ளாகும் போது மன அமைதியைத் தேடி ஆன்மீகம், தியானம், யோகா போன்ற பலவற்றிலும் பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டுகிறான். இளமையிலிருந்தே இதைக் கைக்கொள்ளப் பெற்றிருந்தால் வளர்ந்த நிலையில் வெவ்வேறு மனப் பயிற்சிகளை நாடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. எனவே, குறள் அறிவோம்; வளம் பெறுவோம்; பலனடைவோம்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Gopalakrishnan, R. M. (2004). Tamil dictionary of Madurai (மதுரைத் தமிழ்ப் பேரகராதி). *Chennai*: Santhiya Publication.
2. Kanurakaran, K. (2015). *Kural Mozhi: Nadai valamum karutthu pulappaddu thiranum (குறள் மொழி: நடை வளமும் கருத்துப் புலப்பாட்டுத் திறனும்)..* Kuala Lumpur: University of Malaya.
3. Punitha, M. (2008). *Thirukkuralil aram (திருக்குறளில் அறம் ஓர் ஆய்வு).* Kuala Lumpur: University of Malaya.
4. Varatharasan, M. (1987). *Life value in Valluvam (வள்ளுவர் காட்டிய வழி).* Chennai: Thirukkuralar Publication.
5. McLeod, S. A. (2007). *Maslow's Hierarchy of Needs.* Retrieved from http://www.simplypsychology.org/maslow.html.
6. Varatarasan, M. (2000). *Thirukkural (திருக்குறள்)*. Thirunelveli: Saiva Siddhanntha Publication.